செ.வெ.எண்: 69 நாள்: 24.11.2016

# புதுக்கோட்டையில் ஓய்வூதியர்களுக்கு ரூ.20.30 இலட்சம் மதிப்பில் நிதியுதவித்தொகைக்கான காசோலைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஓய்வூதியர் குறைதீர்க்கும் கூட்டம் சென்னை ஓய்வூதிய இயக்குநர் திரு.எஸ்.நசீர்உஷேன் அவர்கள் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (24.11.2016) நடைபெற்றது.

இந்த ஓய்வூதியர் குறைதீர்க்கும் கூட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்தும், ஓய்வூதியர்களுக்கு நிதியுதவித்தொகைக்கான காசோலைகளை வழங்கி பேசியதாவது:

தமிழகஅரசு ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஓய்வூதியர்களின் குறைகளை போக்கும் வகையில் ஓய்வூதியர் குறைதீர்க்கும் கூட்டம் நடத்த உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள ஓய்வூதியர்களின் குறைகளை போக்கும் வகையில் மாவட்ட ஆட்சியரகத்தில் ஓய்வூதியர் குறைதீர்க்கும் கூட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதில் ஓய்வூதியர்களின் சிறப்பு நிலை ஊதியம் நிர்ணயம் செய்தல், ஊதிய முரண்பாடு களைதல், ஊதிய நிலுவைத்தொகை வழங்குதல், ஓய்வூதியம் மற்றும் பணப்பலன்கள் வழங்குதல், ஓய்வூதியம் பெற்றுத்தர கோருதல், பகுதி குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருவதை முழு ஓய்வூதியமாக வழங்க கோருதல் என ஓய்வூதியர்களிடமிருந்து வரப்பெற்ற 30 விண்ணப்பங்களில் 25 விண்ணப்பங்களுக்கு தீர்வு காணப்பட்டது. 5 விண்ணப்பங்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் 51 பயனாளிகளுக்கு ரூ.20.30 இலட்சம் மதிப்பில் மருத்துவ நிதி மற்றும் குடும்ப பாதுகாப்பு நிதியுதவித்தொகைக்கான காசோலைகளும் வழங்கப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப.. அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, புதுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்,இ.ஆ.ப., இணை இயக்குநர் திரு.ராமச்சந்திரன் (ஓய்வூதியத்துறை), இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சாந்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) திருமதி.கார்த்தியாயினி, மாவட்ட கருவூல அலுவலர் திருமதி.ஆர்.ரமா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**